பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

ஸ்ரீ பியாரேலால்ஜியால் நடத்தப்படும் காந்தியடிகளின் ஆங்கிலப் பத்திரிகையை அனுமதியுடன் தமிழாக்கியது.

18 ] சென்னை—ஞாயிறு, ஆகஸ்ட் 11, *1946.* [ விலை. அணா. 2

## ஒரு குறிப்பு

சென்ற வாரம் வெளியான தமிழ் ஹரிஜன் தலையங்கம் காந்தியடிகளுடைய "ஆகஸ்டு 9உ" என்னும் கட்டுரை. அதற்கு அவர் ஒரு குறிப்பு எழுதியிருக்கிறார். ஆனால் அது தமிழ் ஹரிஜன் அச்சான பிறகு வந்து சேர்ந்ததால் அதை இந்த இதழிலேயே தருகிறேன்.

ஆசிரியர்:
தமிழ் ஹரிஜன்

காந்தியடிகளின் குறிப்பு:

திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் ஆகஸ்ட் 9-ம் தேதி ஹர்த்தால் செய்ய வேண்டும் என்று தாம் சொல்லிய யோசனையை வாபீஸ் வாங்கிக் கொண்டதை நான் இந்த ("ஆகஸ்ட் 9உ") கட்டுரையை ஹரிஜன் பத்திரிகைக்கு அனுப்புமுன் பார்த்தேன். கட்டுப்பாட்டு உணர்ச்சியின் காரணமாக வாபீஸ் வாங்கியதைக் காண எனக்கு மிகுந்த சந்தோஷமாயிருக்கிறது. அவர் வாபீஸ் வாங்கிக் கொண்டதால் நான் என் கட்டுரையைப் பிரசுரியாமல் இருந்து விடலாம். ஆனால் அது சம்பந்தமாகப் பல விஷயங்கள் எழுதியிருப்பதால் அதைப் பிரசுரிக்கிறேன்.

புனா, —2-8-46.— மோ. க. காந்தி

## டாக்டர்களின் குறைகள்

திரு. பிரிஜ்லால் நேரு கீழ்கண்ட கேள்விகளை அனுப்பியிருக்கிறார்:—

"(1) டாக்டர்கள் வியாதிப் பரிசோதனை செய்து அபிப்பிராயம் கூறுவதை நிச்சயமாக நம்புவதற்கில்லை என்பதும் டாக்டர்கள் ஒவ்வொருவரும் வேறு வேறு விதமாக அபிப்பிராயம் கூறுகிறார்கள் என்பதும் அநேக சமயங்களில் நோயாளிகள் குணமான பிறகோ அல்லது இறந்த பிறகோதான் இன்ன நோய் என்று நிச்சயமாகத் தெரிகின்றது என்பதும் சர்வ சாதாரணமான அனுபவமல்லவா?

(2) நோய் இதுதான் என்று கண்டு பிடித்து விட்டாலும் அதைக் குணப்படுத்தக்கூடிய சிகிச்சை முறைகள் இவைகள்தாம் என்று நூல்களிலாவது நிச்சயமாகத் தெரியாவிட்டால் என்ன பிரயோஜனமாகும்? இது விஷயத்தில் வைத்திய நூல்கள் எதுவும் நிச்சயமாகக் கூறக்காணோம். நோய்கள் பல விதம் என்று டாக்டர்கள் கூறுவதுபோலக் கூறாமல் இயற்கை வைத்தியம் எல்லா நோய்களும் ஒரு நோய்தான் என்று கூறுவதால், இயற்கை முறைக்கு நோய்ப் பரிசோதனை அவசியமில்லையல்லவா?

(3) டாக்டர்கள் ஆப்பரேஷன் செய்யும்பொழுது உடம்பைப் பற்றித் தங்களுக்குத் தெரிந்த அறிவை உபயோகித்துக் கொள்வது போல மருந்து கொடுக்கும் பொழுது உபயோகித்துக் கொள்கிறார்களா? டாக்டர்கள் உடற்கூறு சாஸ்திரத்தைப் பள்ளிக்கூடத்தில் படித்தது உண்மை தான். ஆனால் அதை உபயோகியாமல் மறந்து விடுகிறார்கள். அப்படி இருக்க அவர்களை எதற்காக உடற்கூறு சாஸ்திரம் கற்றவர்களென்று மதிக்க வேண்டும்? அவர்களைப் போலவே தானே வைத்தியர்களும் திரிதோஷ சாஸ்திரத்தைக் கற்றும் உபயோகியாமல் இருக்கிறார்கள். அந்த நிலைமையில் டாக்டர்களுக்கு கொடுக்கும் மதிப்பை வைத்தியர்களுக்கும் கொடுக்க வேண்டியது தானே.

(4) வைத்தியர்களிடம் காணப்படும் குறைகளுக்குக் காரணம் அரசாங்கம் அவர்களுக்கு ஆராய்ச்சி சாலைகள் ஏற்படுத்த வேண்டிய கடமையைச் செய்யத் தவறிவிட்டதுதான். தனிப்பட்டவரோ சர்க்காரோ செய்யும் குற்றத்தை வைத்து அந்த வைத்திய முறையைக் குறை கூறலாமா? சர்க்கார் ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கும் டாக்டர்கள், தாங்களாக ஆராய்ச்சி செய்வதும் இல்லை, வெளி நாடுகளில் நடை பெறும் ஆராய்ச்சிகளைப்பற்றிப் படிப்பதுமில்லை.

(5) மகாத்மாஜியின் சரீரத்தை டாக்டர்கள் அடிக்கடி பரிசோதனை செய்கிறார்கள். அதனால் அவர்களுக்குத் தகுதியில்லாமலே முக்கியத்துவம் ஏற்பட்டு விடுகிறதல்லவா? மகாத்மாஜி மற்ற வைத்திய முறைகளை இங்கிலீஷ் வைத்திய முறையை விட அதிக முக்கியமாக எண்ணா விட்டாலும் சரிசமானமாகவாவது எண்ண வேண்டாமா? அப்படி எண்ணுவதை அது தடுக்கவில்லையா?

நான் இந்தக் கேள்விகளுக்குக் கூறும் பதில்கள் இவை:—

1. இந்தக் கேள்வியில் குறிப்பிடும் விஷயம் உண்மை தான். ஆனாலும் டாக்டர்கள் நல்ல வருமானம் அடைந்துதான் வருகிறார்கள். இந்த விஷயத்தை எல்லோரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது தான்.

2. நோயைச் சரியாகப் பரிசோதித்துக் கண்டு விட்டால் அந்த நோய்க்கேற்ற பரிகாரம் செய்யப்படுகிறது என்பதே என்னுடைய அனுபவம். வைத்திய நூல்களில் ஒரு நோய்க்குப் பல மருந்துகள் கூறியிருப்பதைக்கொண்டு அந்த நூல்களைக் குறை கூறுவது தவறு. உடம்பின் உறுப்புக்கள் பல விதமாகச் சிருஷ்டிக்கப் பட்டிருப்பதால், ஒரே ஒரு மருந்து போதுமென்று சொல்ல முடியாது. இயற்கை வைத்தியம் செய்வதற்கு நோய்ப் பரிசோதனை செய்வது அவசியமில்லை என்று சொல்வது உண்மையாகாது. இயற்கை வைத்தியம் ஒரே நோய் ஒரே சிகிச்சை என்று கூறுவதால் இயற்கை முறைக்கு வேண்டிய நோய்ப் பரிசோதனை மற்ற முறைகளுக்கு வேண்டியதைவிட எளியதாகும். ஒரே நோய் ஒரே சிகிச்சை என்பது ஒரு நல்ல தத்துவம். ஆயினும் எந்த இயற்கை வைத்தியரும் கண்ணை மூடிக்கொண்டு எல்லா நோயாளிகளுக்கும் மண் சிகிச்சையைச் செய்ய மாட்டார்.

(3) டாக்டர்கள் வைத்தியம் செய்யும் பொழுது தாங்கள் படித்த உடற்கூறு சாஸ்திரத்தை உபயோகிப்பதில்லை என்று கூறுவது அவர்களை நிரம்ப அவமதிப்பதாகும். டாக்டர்களையும் வைத்தியர்களையும் ஒன்று சேர்த்துப் பேசுவது தவறு. அவர்கள் நோய்களை முற்றிலும் மாறுபட்ட வேறு வேறு முறையிலேயே பரிசோதனை செய்கிறார்கள். திரிதோஷத் தத்துவத்தின் நன்மை தீமைகளைப் பற்றி எனக்குக் கொஞ்சமும் தெரியாது.

(4) ஆராய்ச்சி சாலைகள் ஏற்படுத்திக் கொடுக்காதிருப்பதற்காக அரசாங்கத்தைக் கண்டிப்பதை நான் ஒத்துக் கொள்ள முடியாதவனாய் இருக்கிறேன். உண்மையான ஆராய்ச்சி விஷயத்தில் வைத்தியர்களுக்கு அக்கரை இல்லை என்று நான் அடிக்கடி சொல்லி வருகிறேன். பெரிய வைத்தியர்கள் பணம் தேடுவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள். மற்ற வைத்தியர்களுக்கு ஆராய்ச்சி செய்வதற்குள்ள கல்வி அறிவு கிடையாது. பழைய ஆயுர்வேத நூல்களில் உள்ளதே போதுமென்று திருப்திப்பட்டுக்கொள்ளுகிறார்கள். இதைக்காண எனக்கு வருத்தமாய் இருக்கிறது. நமது நாட்டுக்கு உகந்தவை என்ற காரணத்தால் எனக்கு ஆயுர்வேத முறையிடமும், யூனானி முறையிடமும் அதிகமான மதிப்பு உண்டு. ஆயினும் என்னால் இந்தக் குறையைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

(5) டாக்டர் நண்பர்கள் என்னுடைய உடம்பை இடைவிடாமல் பரிசோதித்து வருவதின் காரணமாகத் தகுதியில்லாமலே பெருமை அடைந்து விடுகிறார்கள் என்று நான் எண்ணவில்லை. அவர்களுக்கு எந்த விதமான பெருமையும் தேவையில்லை. என்னைப் பரிசோதிக்கும் முன்பே அவர்கள் பெரிய வைத்தியர்களென்று பெருமை அடைந்து விட்டவர்கள். அவர்கள் என்னைப் பரிசோதிப்பது மற்ற வைத்திய முறைகளை மங்கி விடும்படி செய்து விடவில்லை. எனக்கு அநேக வைத்தியர்களும் ஹக்கீம்களும் நண்பர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் முறைக்கு நோய்ப் பரிசோதனையை விரிவாக நடத்துவதும், அடிக்கடி நடத்துவதும் அவசியமில்லை. துரதிர்ஷ்டவசமாக எங்கும் விளம்பரமாகி விட்ட இங்கிலீஷ் வைத்திய முறையில் பரிசோதனை செய்ய நான் இடங்கொடுக்கிறேன் என்பது உண்மைதான். ஆனால் நான் அந்த முறைப்படி மருந்துகள் எதுவும் சாப்பிடுவதில்லை. எனக்கு நடக்கும் சிகிச்சையெல்லாம் ஐம்பூதங்களின் உபயோகமும் உணவு மாறுதல்களும உடம்பைப் பிடித்து விட்டுக் கொள்ளுதலும் தான்.

நான் இயற்கை வைத்தியத்தையும் தேசிய வைத்திய முறைகளையும் நேசித்த போதிலும் மேல் நாட்டு மருந்து முறை அடைந்துள்ள முன்னேற்றத்தை அறியாமலில்லை. நான் அதற்கு மாயவித்தை என்றே பேர் சூட்டி இருக்கின்றேன். அது கர்ண கடூரமான சொற்றொடர் தான். அந்த முறை அழியாத ஆன்மாவை புறக்கணிப்பதாலும், உயிரைக் காப்பாற்றுவதற்காக எந்த முறையானாலும் பாதகமில்லை என்று கூறுவதாலும், உயிருடனேயே அறுத்துப் பரிசோதனை செய்யும் முறையை ஏற்றுக்கொள்வதாலும், நான் அந்த அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள மாட்டேன். இயற்கை வைத்தியத்தில் பெரிய குறைபாடுகள் இருந்த போதிலும் இயற்கை வைத்தியர்கள் சோம்பலின் காரணமாகச் செய்ய முடியாததைச் செய்து விடுவதாகக் கூறியபோதிலும் நான் இயற்கை வைத்தியத்தையே சரியான வைத்திய முறையாகக் கூறுவேன். இயற்கை வைத்திய முறையில் ஒவ்வொருவரும் தமக்குத் தாமே வைத்தியம் செய்து கொள்ள முடியும். மற்ற முறைகளில் இப்படிச் செய்ய முடியாது.

உருலி கஞ்சன், — 4-3-46 — மோ. க. காந்தி.

## தென் ஆப்பிரிக்கா

தென் ஆப்பிரிக்காவிலிருந்து வந்திருக்கும் கீழ்க்கண்ட செய்தி வாசகர்களுக்கு சுவையுடையதாயிருக்கும். அங்கே இந்தியர்கள் நடத்தும் போராட்டத்தில் தாமும் கலந்துகொண்டு சேவை செய்யும் மைக்கேல் ஸ்காட் பாரதியார் "பலத்தால் செய்யற்க" என்ற தலைப்பின் கீழ் ஒரு குறிப்பு எழுதியிருக்கிறார். அது ஏற்கனவே தினசரிப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. அது ஐரோப்பியருடைய மனத்தை இளக்குமென்று எண்ணுகிறேன். அவர் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் கீழ்க்கண்ட விஷயத்தையும் எழுதியிருக்கிறார்.

"உங்களையும் உங்கள் இயக்கத்தையும் காட்டக்கூடிய சக்தியானது இப்போது எதிர்த்து அணிவகுத்து நிற்கும் வல்லமையும் வஞ்சகமும பொருந்திய சக்திகளால் அணைந்துவிட மாட்டாது."

டர்பனிலிருந்து ஒரு இங்கிலீஷ் சகோதரி எழுதுகிறார்:

"நான் சத்தியாக்கிரகிகளுக்குத் தைரியம் ஊட்டுவதற்காக சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்படும் முதல் நாள் அவர்களுடைய முகாமிற்குச் சென்றிருந்தேன். அவர்களுடைய உற்சாகமும் மனப்பான்மையும் என் மனதைக் கொள்ளை கொண்டு விட்டன. நான் இதற்கு முன்னால் இந்தியர்கள் நடத்தும் இயக்கங்கள் சிலவற்றைப் பாாத்திருக்கிறேன். அவைகளில் கண்ட விஷயத்தையே இங்கும் கண்டேன். அதன் பின் ஒருநாள் கோர்ட்டுக்குப் போயிருந்தேன். அங்கு நடப்பதைப் பார்த்தபொழுது கைதிகள் ஜட்ஜுகள் போலவும். சர்க்காரும், உத்தியோகஸ்தர்களும் கைதிகள் போலவும், தோன்றினார்கள். தலைவர்கள் சிலர் கொடுத்த வாக்கு மூலங்களைப் படித்தால் உங்களுக்கும் இப்படியே தோன்றும்.

மைக்கேல் ஸ்காட் பாதிரியார் மிகவும் நல்லவர். அவருக்கு வயது நாற்பது. ஆங்கிளிக்கன் கொள்கையை அனுஷ்டிப்பவர்கள் மாதிரி ஷர்ட் அணிந்துகொண்டிருக்கிறார். அவரை ஸ்காட் அப்பா என்றே கூப்பிடுகிறார்கள். அவரைப் பார்த்தால் எனக்கு ஆண்ட்ரூஸ் ஞாபகம் வருகிறது.

மணிலால் திரும்பி வந்துகொண்டிருக்கிறார் என்பதை அறிய சந்தோஷமாக இருக்கிறது. இங்கு இந்தியர்கள் நடத்தும் போராட்டம் உயர்ந்த கௌரவமான முறையிலேயே நடந்து வருகிறது. எனினும் மணிலால் வந்தால் அவர் இங்குள்ள தலைவர்களுக்கு உதவியாய் இருப்பார் என்பதில் சந்தேகமில்லை. போராட்டம் சிறந்த முறையில் நடப்பதால்தான் ஐரோப்பியர்கள் அதில் கலந்துகொள்ள ஆரம்பிக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய தொகை இன்னும் சிறியதாகவே இருந்துகொண்டிருக்கிறது"

நான் முன்னால் சொன்னபடியே நம்முடைய ஜனங்கள் உண்மையாகவே அஹிம்சையாக இருந்தால் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். அஹிம்சை ஒரு நாளும் தோல்வி அறியாது.

மற்றொரு நண்பர் எழுதுகிறார்:

"தாங்கள் நாயுடு அவர்களின் மனைவியார் காலமாய் விட்டதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்த அம்மையார் இறப்பதற்கு மூன்று மாதத்திற்கு முன்னால் ஒரு அபாயத்தில் அகப்பட்டுக் கொண்டார். அந்த மூன்று மாத காலத்திலும் அவருடைய குடும்பத்தாருக்கு டெலிபோன் மூலகாக என்னிடம் பேச முடியவில்லை. என்னுடைய டெலிபோன் நெம்பர் தெரிய முடியாமல் இருந்ததுதான் காரணம். அந்த அம்மையார் என்னைப் பார்க்க வேண்டுமென்று விரும்பியதை அவர் இறந்த மறுநாள்தான் அவர்க

னால் எனக்கு டெலிபோன் மூலம் சொல்ல முடிந்தது. நான் அந்த அம்மையாரை நேசித்தேன். அவர் மிகவும் நல்லவர். நட்புக்கு உகந்தவர். இல்லறம் நடத்துவதில் கை தேர்ந்தவர். எந்த நேரம் போனாலும் எவ்வளவு வேலையா யிருந்தாலும் இனிய முகத்தோடு வரவேற்பார். அவருடைய வீரத்தை என்னசொல்வேன். அவருடைய குழந்தைகள் இந்தியாவிலிருந்த காலமுழுவதும் அவர் எவ்வளவு கவலைப் பட்டிருப்பார் என்பதை யோசித்துப் பாருங்கள். அவருக்கும் திரு. தம்பிக்கும் சேர்த்து ஒரு ஞாபகச் சின்னம் ஏற்படுத்தப்படும் என்று நம்புகிறேன்."

நான் தென்னாப்பிரிக்காவிலிருந்த போது சத்தியாகிரகம் நடந்த சமயத்தில் முதன் முதலாக சத்தியாக்கிரகிகளாக ஆனவர்களில் இந்த அம்மையாருடைய கணவரும் ஒருவர் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

புனா, — 30-7-46 — மோ. க. காந்தி.

## அசுத்தத்தின் எல்லை

பாஞ்சுகனி அழகான மலை வாசஸ்தலம். அங்குள்ள காற்றே போதும், வேறு மருந்து வேண்டாம். ராஜாக்களும் மகாராஜாக்களும் முஸோரிக்குப் போவது போல இங்கே வருவதில்லை. ஆனாலும் இங்கே ஏழைகள் தங்குவதற்கான இடம் எதுவும் காணோம். இப்பொழுது அவர்களுக்கு ஒரு வாசஸ்தலம் ஏற்படுத்தப் போவதும் மெதுவாகச் செய்யும் பரிகாரமே யாகும். தற்பொழுது காணப்படும் அசுத்த நிலைமை இருந்து கொண்டே இருக்குமானால் பாஞ்சுகனி இனிமேல் ஆரோக்கிய வாசஸ்தலமாக இருக்க முடியாது. மகாபலேஸ்வரத்தின் நிலைமையும் அப்படித்தான். இந்த நிலைமை உண்டாயிருப்பதற்கு நம்மைக் குறைகூறிக் கொள்ளவேண்டுமேயன்றிச் சர்க்காரை குறை கூறுவதில் பிரயோசனமில்லை. ஒவ்வொருவருக்கும் உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும் விஷயத்தில் ஓர் அளவு ஞானமுண்டு என்றும் ஆனால் நம்முடைய ஜனங்கள் ஆரோக்கிய விதிகளைப் பற்றிக் கொஞ்சம்கூடத் தெரிந்தவர்களாகத் தோன்றவில்லை என்றும் டாக்டர்கள் கூறக் கேட்டிருக்கின்றேன். இதை வருத்தத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்.

பாஞ்சுகனியில் வீடு தெரு சுத்தமாய் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் சரியானபடி செய்யப்படாதிருப்பதைக் குறித்து டாக்டர் டின்ஷா மேத்தா எழுதியவற்றைக் கீழே தருகின்றேன். தலையைத் தொங்கவிடும்படியான இந்தக் கேவலமான நிலைமை எவ்விதக் காலதாமதமுமின்றி மாற்றி அமைக்கப்படும் என்ற நம்பிக்கையின் பேரிலேயே அதை இங்கு பிரசுரிக்கின்றேன்.

"பாஞ்சுகனியில் தெருக் குப்பைகளை யெல்லாம் வாரிக் கொண்டு போய்ச் சேர்த்து வைக்கும் இடத்தைப் பார்ப்பதற்காக நானும் டாக்டர் சவாந்தும் ஜூலை 19உ போனோம். அந்த இடம் பெரிய ரோட்டிலிருந்து அரை மைல் தூரத்திலும் கடைத்தெருவிலிருந்து ஒன்றரைமைல் தூரத்திலும் சிட்னிபாயிண்ட் என்னும் இடத்துக்குப் பின்புறமாக இருக்கிறது. பெரிய ரோட்டில்தான் பார்ஸிச் சிறுவர்கள் பள்ளிக்கூடம் இருக்கிறது. அந்தக் குப்பை மேட்டிலிருந்து வருகிற நாற்றமான காற்று அந்தப் பள்ளிக்கூடத்திற்கு வருவதைக் கண்டோம். சிட்னிபாயிண்ட் என்பது ஒரு நல்ல அழகான இடம். துர்நாற்றம் மட்டும் இல்லாம லிருக்குமானால் அங்குள்ள காற்று ஆரோக்கியம் தருவதாய் இருக்கும். இப்பொழுது அங்கே மோட்டாரில் போவதற்கேற்ற ரோடு போடப்பட்டிருந்தாலும் கூட யாரும் இப்பொழுது அங்கே போவதில்லை. அங்கே புல்தான் முளைத்து வளருகிறது. அங்கே இரண்டே இரண்டு வீடுகள்தான் காணப்பட்டன. அவைகளும்கூட நாற்றம், கொசு, ஈ இவைகளின் காரணமாகக் காலியாகவே இருக்கின்றன.

ஜனங்கள் குப்பை கூளங்களை யெல்லாம் தெரு ஓரத்திலேயே கொட்டுகிறார்கள். அவைகள் பெரிய பெரிய குவியல்களாக கிடக்கின்றன. ஈக்கள் மொய்த்துக் கொண்டிருக்கின்றன. கிருமிகள் நிறைந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இன்னும் கொஞ்ச தூரம் போனதும் குழிகளில் மலம் கொட்டிக் கிடப்பதைக் கண்டேன். நான்கு குழிகள் நிறைந்து இருந்தன. ஒவ்வொன்றும் 10 அடி நீளம் 5 அடி அகலம் 3 அடி ஆழம் உள்ளதாக இருந்தது. சிலகுழிகள் காலியாகக் கிடந்தன. மலம் குழிகளுக்குள் கிடாவாமல் வெளியிலும் சிதறிக் கிடந்தன. தோட்டிகள் இப்படி வெளியே கிடவாமல் இருப்பதற்கு அக்கரை கொள்ள வில்லை என்று தோன்றுகிறது. அவர்களிடம் இந்தக் குறையைப் பற்றியோ அல்லது வேறு எந்த குறையைப்பற்றியுமோ சொன்னால் உடனே வேலை நிறுத்தம் செய்து விடுவார்களாம். அதனால் முனிஸிபாலிட்டியார்களும் ஜனங்களும் அவர்களுக்குப் பணிந்துபோகவேண்டியவர்களாக இருக்கிறார்கள். பாஞ்சுகனியிலுள்ள தோட்டிகள் பிற இடங்களிலிருந்து வரும் தோட்டிகளை வரவிடுவதும் இல்லை.

நான் பார்த்த அசுத்தங்களும் என் மூக்குக்கு வந்த நாற்றங்களும் இன்னும் என்னைவிட்டுப் போகவில்லை. அந்த இடங்களைப் பார்க்கப் போகிறவர்கள் கண்ணையும் மூக்கையும் சரிப்படுத்திக் கொண்டே போக வேண்டும். திரும்பி வந்ததும் ஸ்நானம் செய்து உறங்க வேண்டும். அப்படியானால் தான் மனமும் வயிறும் ஓய்வு கொள்ளும். இல்லையானால் வாந்தி வந்து விடும். வைத்தியரைக் கூப்பிட வேண்டியிருக்கும்.

இந்த மோசமான நிலைமையை மாற்றுவதற்காக நான் கீழ்க்கண்ட யோசனைகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

1. குப்பைகளையும் மலத்தையும் வெளியில் சிதறாமல் குழிகளில் போட்டு அவற்றுக்கு இரண்டு மடங்கு சுத்தமான மண்ணைப் போட்டு மூடவேண்டும்.
2. அல்லது அவைகளை யெல்லாம் அதற்கான காளவாயில் போட்டு எரித்துவிடவேண்டும்.
3. அல்லது நீர் கக்கூஸ் தொட்டி போல் கட்டி அவைகளிலிருந்து வழிந்து வரும் ஜலத்தை காய்கறித் தோட்டத்திற்கு உபயோகிக்க வேண்டும்.
4. அல்லது ஒவ்வொரு வீட்டிலுமே அந்த மாதிரி தொட்டி கட்டும்படி செய்ய வேண்டும்.

குளிக்கிற ஜலத்தை அந்தத்தொட்டியிலுள்ள அசுத்தத்தைப் போக்குவதற்கு உபயோகிக்கலாம். அந்தத் தொட்டிகளை எப்படிக் கட்ட வேண்டு மென்பதை ராணுவ கண்ட்ராக்டர்களிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

5. அல்லது சாக்கடைத் திட்டம் ஒன்று ஏற்படுத்த வேண்டும். ஆனால் அதற்குப்போதுமானஜலம் இருக்க வேண்டும். அதனால் பாஞ்சுகனி முனிஸிபாலிடியில் ஏற்படுத்தஉத்தேசிக்கும் ஜல வசதித் திட்டத்தை முதலில் ஏற்படுத்தியாக வேண்டும்.

கடைசியில் சொன்ன யோசனைதான் நிரம்ப நல்லதும் முக்கியமானதும் ஆகும். ஆனால் அதற்கு நிறையப் பணம் வேண்டும். அதிகக் காலமும் பிடிக்கும். அதுவரை செய்யக் கூடியதெல்லாம் என்னுடைய முதல் இரண்டு யோசனைகளின்படி நடப்பதேயாகும்."

புனா — 1-8-46 — மோ. க. காந்தி

(ஹரிஜன பந்துவிலிருந்து)

# தமிழ் ஹரிஜன்

ஆகஸ்ட் 11 ஞாயிறு 1946

## வேலை நிறுத்தங்கள்

நான் தபால்காரர் வேலை நிறுத்தத்தைச் சரியானது என்று கூறியதாகப் பத்திரிகைகளில் வந்த செய்தி உண்மையானதன்று. ஒரு நாள் ஒரு தபால்காரர் என்னிடம் வந்து "வந்தேமாதரம்" என்று கூறிவிட்டுப் போவதற்கு மட்டும் அனுமதி வேண்டும் என்று கோரினார். கனு காந்தி அவரை என்னிடம் அழைத்து வந்தார். ஆயினும் வந்தவர் அப்பொழுது ஆரம்பிக்கப் பட்டிருந்த தபால்காரர் வேலை நிறுத்தத்தை நான் ஆசீர்வதிக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார். வேலை நிறுத்தம் நியாயமான காரணங்களால் ஆரம்பிக்கப்பட்டு வேலை நிறுத்தம் செய்வோர் முற்றிலும் சாத்வீகமாக நடந்து கொண்டால் அவர்கள் வெற்றி பெறாமலிருக்க முடியாது என்று நான் கூறினேன். இதைக் கொண்டு நான் அந்தக் குறிப்பிட்ட வேலை நிறுத்தத்தை ஆதரிப்பதாகக் கூற முடியாது. நான் கூறியதும் தபால்காரர் வேலை நிறுத்தத்தின் நியாயங்களும் ஒருபுறமிருக்க, நான் வேலை நிறுத்தங்களைப் பரிபூரண சாத்வீக முறையில் செய்து வெற்றி பெறும் மார்க்கத்தைக் கூறத் தகுந்த நிபுணனாக யிருப்பதால், வேலை நிறுத்தங்கள் வெற்றி பெறுவதற்கு அத்தியாவசியமான நிபந்தனைகளை வேலை நிறுத்தம் செய்வோர்க்கும் பொது ஜனங்களுக்கும் கூறக் கடமைப் பட்டவனாக யிருக்கின்றேன்.

நியாயமான காரணமின்றி வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்பதில் சந்தேகமில்லை. நியாயமான காரணமின்றிச் செய்யும் வேலை நிறுத்தம் எதுவும் வெற்றி பெற மாட்டாது. அத்தகைய வேலை நிறுத்தங்களுக்குப் பொது ஜனங்கள் எவ்வித ஆதரவும் தரலாகாது.

ஆனால் பாரபட்சமின்றி அபிப்பிராயம் கூறக் கூடியவரும் பொது ஜனங்களுடைய நம்பிக்கையைப் பெற்றிருப்பவருமான தலைவர்கள் ஆதரவு தந்தாலன்றிப் பொது ஜனங்கள் வேலை நிறுத்தத்தின் நியாயா நியாயங்களை அறிந்து கொள்வதற்கு மார்க்கம் கிடையாது. வேலை நிறுத்தத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அதைப் பற்றிச் சரியான அபிப்பிராயம் கூற முடியாது. அதனால் இரு கட்சியாரும் ஏற்றுக் கொள்ளும் மத்யஸ்தமேனும், கோர்ட்டு மூலம் விசாரணை செய்து தீர்ப்புக் கூறுவதேனும் அவசியமாகும். அவ்விதம் மத்யஸ்தமோ கோர்ட்டு விசாரணையோ ஏற்பட்டிருக்குமானால் அப்பொழுது விஷயம் வெளியில் தெரியக் கூடச் செய்யாது. ஆயினும் அகம்பாவமான முதலாளிகள் மத்தியஸ்தர் தீர்ப்பை அலட்சியம் செய்வதும், சரியான வழிகாட்டிகளில்லாத தொழிலாளிகள் தங்களுக்குள்ள ஆற்றலை உணர்ந்து கொண்டு அந்த மாதிரி நடந்து தங்கள் கோரிக்கைகளைப் பலவந்தமாகப் பெற தீர்மானிப்பதும் உண்டு.

பொருள் விஷயத்தில் வசதிகள் பெறுவதற்காக நடத்தப்படும் வேலை நிறுத்தங்களுக்கு ஒருநாளும் அரசியல் நோக்கமோ அல்லது வேறு தனிப்பட்ட நோக்கமோ இருத்தலாகாது. அத்தகைய நோக்கமிருந்தால் அரசியல் லட்சியம் எதுவும் ஒருநாளும் முன்னேறி விடப் போவதில்லை. தபால் இலாகா பொது ஜன சேவை செய்யும் இலாக்காக்களில் ஒன்று. இந்த இலாக்காக்கள் வேலை நிறுத்தம் செய்தால் பொது ஜனங்களுடைய தினசரி வாழ்வு சரியாக நடக்காமல் குலைந்து போகும். எந்த மாதிரியான வேலை நிறுத்தமானாலும் அரசியல் நோக்கத்தோடு வேலை நிறுத்தம் செய்தால் அரசியல் நோக்கம் நிறைவேறாததோடு வேலை நிறுத்தம் செய்வோருக்குத் துன்பங்களும் உண்டாகும். இந்தத் தபால்காரர் வேலை நிறுத்தத்தால் சர்க்காருக்குக் கொஞ்சம் அசௌகரியம் ஏற்படலாம். ஆனால் சர்க்கார் நடைபெறாமல் ஸ்தம்பித்துப் போய் விடமாட்டாது. பணக்காரர்கள் அதிகப் பணம் செலவு செய்து கடிதங்களை வேறு மார்க்கமாக அனுப்பிக் கொள்வார்கள். ஆனால் ஏழை மக்கள்தான் வெகு காலமாக அனுபவித்து வந்த முக்கியமான உதவியைப் பெற முடியாதவர்களாக ஆகி விடுகிறார்கள். எல்லா நியாயமான முறைகளையும் அனுஷ்டித்துப் பார்த்துப் பிரயோஜனமில்லை என்று கண்ட பிறகுதான் இத்தகைய வேலை நிறுத்தங்களை ஆரம்பிக்கலாம். இப்பொழுது மாகாணங்களில் தேசீய சர்க்கார்கள் நடந்து வருகின்றன. அதனால் தபால்காரர் வேலை நிறுத்தம் ஆரம்பிப்பதற்குமுன் இந்தச் சர்க்கார்களை கலந்துகொள்ள வேண்டும். திரு பாலா சாகிப் கெர், திரு. மங்களதாஸ் பக்வாசா, சர்தார் வல்லபாய் பட்டேல் இந்த விஷயத்தில் தலையிட்டிருப்பதாக அறிகிறேன். தபால்காரர்கள் இவர்களுடைய யோசனையைக் கேட்க மறுத்து விட்டால் அவர்கள் அபாயமான காரியத்தில் இறங்குவதாகவே அர்த்தமாகும். தபால்காரர்களுடைய பலம்பொருந்திய சங்கங்கள் தங்கள் சொந்த அரசாங்கங்களையும் காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்களையும் புறக்கணித்து விட்டால் காங்கிரஸ் மகா சபையை ஏற்றுக் கொள்ளாததாகவே அர்த்தமாகும். காங்கிரஸ் மகா சபை அவர்களுடைய நலன்களுக்கு விரோதமாக நடந்து கொண்டால்தான் அவர்கள் அந்த விதமாகச் செய்வதற்கு உரிமை உடையவர்கள்.

தபால்காரர்களுக்கு அனுதாபமாக வேலை நிறுத்தங்கள் செய்ய வேண்டுமானால் முதலில் தபால்காரர்கள் தங்களுக்குத் தெரிந்த சகலவித நியாயமான முறைகளையும் கையாண்டு பார்த்திருக்க வேண்டும். இரண்டாவதாக காங்கிரஸ் அவர்களுடைய நலன்களுக்கு விரோதமாகவோ அல்லது அவர்களுடைய நலன்களை அலட்சியம் செய்வதாகவோ நடந்து கொண்டிருக்க வேண்டும். பிடிவாதமாக அனுதாபமில்லாமல் நடந்து கொள்ளும் அதிகாரிகளிடமிருந்து நியாயம் பெறும் பொருட்டு அனுதாப வேலை நிறுத்தங்கள் செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் சொன்னால் அப்பொழுதும் அனுதாப வேலை நிறுத்தங்கள் செய்யலாம்.

இப்பொழுது சர்க்காரை ஸ்பிம்பிக்கச் செய்வதற்காகத் தேசமெங்கும் வேலை நிறுத்தங்கள் நடைபெறுவதாகக் கேள்விப்படுகிறோம். இந்த மாதிரி ஸ்தம்பிக்கச் செய்வது அரசியல் போராட்டத்தில் கடைசிக் கட்டமாகும். இதைக் காங்கிரஸ் போன்ற ஸ்தாபனங்கள்தான் கையாளவாம். எவ்வளவு பலமுடையதாயிருந்தபோதிலும் தொழிற் சங்கங்கள் கையாளலாகாது. நாட்டிற்குச் சுதந்திரம் பெறுவதற்குக் காங்கிரசே முதல்தரமான ஆயுதமாக இருக்குமானால் ஸ்தம்பிக்கச் செய்யும் வேலையை காங்கிரஸினிடமே தான் விட்டுவிட வேண்டும்.

தற்சமயம் காங்கிரஸ் மகா சபை பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்படுத்தப் போகும் அரசியல் நிர்ணய சபையை வெற்றிகரமாக நடத்தும் காரியத்திலேயே ஈடுபட்டிருக்கின்றது. அந்த விஷயத்தில் கஷ்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஸ்தம்பிக்கச் செய்யும் வேலைக் நிறுத்தங்கள் காங்கிரஸ் வேலைக்குப் பெரிய தடையாகவே இருக்கும். இதி

லிருந்து நாம் அரசியல் வேலை நிறுத்தங்களை அதன் நியாயா நியாயங்களை வைத்தே மதிப்பிட வேண்டும் என்பதையும் அவைகளைப் பொருளாதார வேலை நிறுத்தங்களோடு சம்பந்தப்படுத்தி விடக் கூடாது என்பதையும் தெரிந்து கொள்ளலாம். சாத்வீகப் போரில் அரசியல் வேலை நிறுத்தங்களுக்குத் தக்க இடமுண்டு. அவைகளை ஒருநாளும் முன்பின் யோசியாமல் ஆரம்பித்து விடக்கூடாது. அவைகள் பகிரங்கமாகவே நடைபெற வேண்டும். போக்கிரித்தனம் ஏற்படலாகாது. பலாத்காரம் ஏற்படும்படியான விதத்தில் நடத்தலாகாது.

ஆதலால் வேலை நிறுத்தம் செய்வோர் அனைவருக்கும் நான் தாழ்மையாகக் கூறிக் கொள்ளும் யோசனை யாதெனில், அவர்கள் மத்யஸ்தத்துக்கோ நியாயாதிபதி தீர்ப்புக்கோ உட்பட்டு நடப்பதாக பகிரங்கமாகக் கூறவேண்டுமென்பதும் காங்கிரஸை வழிகாட்டியாகக் கொண்டு அதன் யோசனைப்படியே நடக்க வேண்டுமென்பதும் ஆகும். அனுதாப வேலை நிறுத்தங்கள் செய்வோர், காங்கிரஸ் மகாசபை அரசியல் நிர்ணய சபையை வெற்றிகரமாகச் செய்யும் வேலையில் ஈடுபட்டிருப்பதாலும் மாகாணங்களில் தேசிய சர்க்கார்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாலும் தங்கள் வேலை நிறுத்தங்களை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் தாழ்மையாக யோசனை கூறுகிறேன்.

உருலி-கஞ்சன், — 3-8-46 — மோ. க. காந்தி.

## கேள்வியும் பதிலும்

### இயற்கை வைத்தியமும் தற்காலச் சிகிச்சையும்

கேள்வி. 1. பூதக் கண்ணாடி எக்ஸ்ரே கருவிபோன்றவைகளைக் கொண்டு நோய்ப் பரிசோதனை நடத்துவதற்குத் தங்கள் இயற்கை வைத்திய முறையில் இட முண்டா?

2. மலேரியாவைக் கொய்னா, வயிற்றுளைவை எமட்டின், கப சுரத்தைப் பென்ஸிலின் 75 சதமானம் குணப்படுத்துவதாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய மருந்துகளை உபயோகிப்பதற்குத் தங்கள் இயற்கை வைத்திய முறையில் இடமுண்டா?

(3) உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல், வீடு முதலியவற்றைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல், நோய்வராமல் தடுத்தல், ஆகியவைகளைப் பற்றிய விஞ்ஞானத்தை ஜனங்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்குத் தங்கள் இயற்கை வைத்திய முறையில் இடமுண்டா?

பதில் :—என்னுடைய இயற்கை வைத்திய முறை கிராமங்களிலுள்ள ஜனங்களுக்காக மட்டுமே ஏற்படுத்தப்பட்டதாகும். ஆதலால் அதில் பூதக் கண்ணாடிக்கும், எக்ஸ்ரே போன்றவைகளுக்கும் இடங் கிடையாது. அதுபோலவே கொய்னா எமட்டின் பென்ஸிலின் போன்ற மருந்துகளுக்கும் இயற்கை வைத்திய முறையில் இடங் கிடையாது. உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுதலும் ஆரோக்கிய முறைகளை அனுசரித்தலும் இயற்கை வைத்திய முறையில் பிரதானமாகும். அந்த முறைக்கு இவைகள் போதும். இந்த வித்தையில் கைதேர்ந்து விட்டால் எந்த விதமான நோயும் வராது. நோயைக் குணப் படுத்துவதற்காகச் சகல இயற்கை விதிகளையும் அனுசரித்தபோதிலும் நோய் வருமானால் நமக்கு ராமநாம மென்னும் சஞ்சீவி மருந்து இருக்கவே இருக்கிறது. ஆனால் ராமநாமத்தைக் கொண்டு குணப்படுத்தும் முறை கண் மூடித் திறக்கும் நேரத்தில் நாடெங்கும் பரவி விட முடியாது. ராம நாம மகிமையை ஒப்புக்கொள்ளும்படி செய்ய வேண்டுமானால் வைத்தியர் ராம நாம சக்தியின் உயிருள்ள உருவமாகவே ஆகிவிடவேண்டும். அதுவரை பஞ்சபூதங்களைக் கொண்டு தான் சிகிச்சை செய்யவேண்டும். ஐம்பூதங்கள் என்பன மண் நீர் ஆகாயம் தீ காற்று ஆகும். இது தான் இயற்கை வைத்தியத்தின் எல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகலால் நான் உருலியில் ஏற்படுத்தியுள்ள ஆச்சிரமத்தில் கிராமவாசிகளுக்கு எப்படிச் சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வது என்பதைக் கற்றுக் கொடுக்கவும் ஐம்பூதங்களைச் சரியான முறையில் உபயோகித்து நோயைக் குணப்படுத்தவும் முயன்று வருகிறோம். அவசியமானால் பக்கத்தில் உண்டாகும் மருந்துப் பச்சிலைகளையும் உபயோகித்துக் கொள்ளுவோம். உடம்புக்கு உகந்ததும் சரியான அளவில் போஷணை தருவதுமான உணவை உண்பது இயற்கை வைத்தியத்தில் ஒரு இன்றியமையாத அம்சம் என்பதில் சந்தேகம் இல்லை.

உருலி கஞ்சன், — 2-8-46 — மோ. க. காந்தி.

(ஹரிஜன பந்துவிலிருந்து)

## இயற்கைச் சிகிச்சையின் பொருள்

இயற்கைச் சிகிச்சையை அறிந்து கொள்வதற்காக அநேகர் உருலி கஞ்சனுக்கு வர விரும்புகிறார்கள். இந்தக் கிராமத்தில் நடக்கும் வேலை டாக்டர் டின்ஷா மேத்தா, திரு ஜஹாங்கீர் படேல், நான் ஆகிய மூவரின் சார்பாக நடைபெற்று வருகிறது. நாங்கள் மூவரும் அந்த ஆச்சிரமத்திற்கு தருமகர்த்தர்கள். டாக்டர் டின்ஷா மேத்தா இயற்கைச் சிகிச்சையில் அனுபவம் பெற்ற வைத்தியர், ஆனால் அவர் அனுபவம் பெற்றதெல்லாம் நகரங்களிலேயேதான்.

அவர் புனாவிலுள்ள தமது ஆஸ்பத்திரியில் எளிய ஜனங்களையும் சேர்த்துக் கொள்வது வழக்கம். ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குச் செய்யும் சிகிச்சையையே செய்து வந்தார். கிராமங்களில் கிடைக்கக் கூடிய பொருள்களைக் கொண்டு செய்யக் கூடிய இயற்கை சிகிச்சைதான் ஏழைகளுக்குச் ஏற்றது என்பது எனது அபிப்பிராயம்.

உதாரணமாகக் கிராமங்களில் ஏற்படுத்தும் இயற்கைச் சிகிச்சை சாலைகளில் மின்சாரத்துக்கும் பனிக் கட்டிக்கும் இடம் கிடையாது.

கிராம மனப்பான்மை கொண்டவராயும் நகரங்களில் வசித்தாலும் கிராமத்தைப் பற்றியே எப்பொழுதும் எண்ணிக் கொண்டிருப்பவராயும் உள்ள என்னைப் போன்றவர்தான் இத்தகைய வேலையைச்செய்ய முடியும். ஆதலால் தர்மகர்த்தர்கள் வேலை முழுவதையும் என்னிடத்தில் விட்டிருக்கிறார்கள். நான் வேலையை ஆரம்பித்து விட்டபோதிலும் எனக்கு உதவி செய்யப் பயிற்சி பெற்றவர்கள் யாருமில்லை. தேவைப்படும் பொழுது டாக்டர் மேத்தாவின் உதவியைப் பெற்றுக்கொள்கிறேன் என்பது வேறு விஷயம். டாக்டர் பகவத் எனக்கு நல்ல உதவி செய்கிறார். அவருடைய மனம் முழுவதும் கிராம வாழ்க்கையிலேயே படிந்திருக்கிறது.

எளிய முறையிலேயே வாழ்க்கையை நடத்தி வருகிறார். ஆங்கில வைத்தியராக இருந்த போதிலும் இயற்கை வைத்தியத்தில் பரிபூர்ண நம்பிக்கையுடையவராக இருக்கிறார். எந்த வேலையையும் அதிகமென்றோ அகௌரவமென்றோ அவர் கருதுவதில்லை. சோர்ந்து போய் உட்காருவதே கிடையாது. மற்றவர்கள் எல்லோருக்கும் இந்த வேலை புதிது. ஆனால் அவர்கள் சேவை செய்ய வேண்டுமென்ற ஆசை அதிகம் உடையவர்களாக இருக்கிறார்கள். இந்த வேலை எனக்கும் புதியதுதான். திரு. தத்தா வாடகை வாங்கிக் கொள்ளாமலே தம்முடைய வீட்டை எங்களுக்குத் தாராளமாக கொடுத்திருக்கி

றார். ஆனால் அந்த வீடு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்குப் போதிய அளவு பெரியதாய் இல்லை. நானும் உருலி ஆச்சிரமத்தில் சாச்வதமாக வசிக்கவில்லை. இனிமேல் ஆறு மாதம் புனாவுக்கு அருகிலும் ஆறு மாதம் சேவாக் கிராமத்திலும் வசிக்க விரும்புகிறேன். ஆகையால் இயற்கை வைத்தியத்தைக் கற்க விரும்புகிறவர்கள் இப்பொழுது இந்தக் கிராமத்துக்கு வருவதில் பிரயோசனமில்லை.

இயற்கை வைத்தியத்திற்கு நான் கூறும் லக்ஷணம் இது. நான் இதைப்பற்றி அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சமாக எழுதி வந்திருக்கிறேன். ஆனால் அந்த விஷயம் என்னுடைய மனத்தில் உருவாகிக்கொண்டு வரும் பொழுதே உருலி ஆச்சிரமத்தில் அதை எப்படி நடத்தப் போகிறோம் என்பதைப் பற்றி கூறுவது நல்லது என்று எண்ணுகிறேன். கிராமவாசிகளானாலும் நகர வாசிகளானாலும் வியாதிகளெல்லாம் உடம்பைப் பற்றியவை மனத்தைப் பற்றியவை, ஆத்மாவைப் பற்றியவை என்று மூன்று வகைப்படும். ஒருவருக்கு எது சரியோ அது எல்லோருக்கும் சரியானதாகவே இருக்கும். ஊரிலுள்ள ஜனங்களில் பெரும்பாலோர் கைத்தொழில் செய்து பிழைப்பவர்கள். மாங்சாதியார் கிராமத்தின் ஒரு பகுதியில் வசிக்கிறார்கள். மஹார் ஜாதியார் மற்றோர் பக்கத்திலும் கஞ்சன் சாதியார் வேறொரு பக்கத்திலும் வசிக்கிறார்கள். கஞ்சன் சாதியாருடைய பேரை வைத்துத் தான் அந்தக் கிராமத்துக்கு உருலி கஞ்சன் என்ற பெயர் உண்டாயிற்று. அந்தக் கிராமத்தில் சில குறவர்களும் இருக்கிறார்கள். அவர்களைச் சர்க்கார் குற்றம் செய்யும் ஜாதியார் என்று குறிப்பிடுகிறார்கள். மாங் ஜாதியார் கயறு திரித்து ஜீவனம் செய்கிறார்கள். யுத்த காலத்தில் அவர்கள் நல்ல ஸ்திதியில் இருந்தார்கள். ஆனால் இன்று சாப்பாட்டிற்குத் திண்டாடுகிறார்கள். இயற்கை வைத்தியர் மாங் ஜாதியாருடைய இந்த நோயையும் எப்படித் தீர்ப்பதென்று யோசிக்க வேண்டியவராய் இருக்கிறார். இது அலக்ஷியம் செய்துவிடக்கூடிய ஒரு வியாதி அன்று. இந்தச் சமூக நோயை அறவே ஒழித்து விடுவது ஊரிலுள்ள ஜனங்கள் ஒவ்வொருவருக்கும் கடமையாகும். எந்த வைத்தியசாலையிலுள்ள எந்த மருந்தும் இந்த நோயைக் குணப்படுத்த முடியாது. ஆயினும் அது காலராவைவிட விஷத் தன்மையில் குறைந்ததன்று. மாங் ஜாதியார் குடியிருக்கும் சில குடிசைகளைப் பார்த்தால் அவைகள் சுட்டுப் பொசுக்குவதற்கு ஏற்றவைகளாகவே தோன்றும். ஆனால் சுட்டுக் கொளுத்துவதால் அவர்களுக்கு புதுக் கட்டடங்கள் கிடைத்துவிடப் போவதில்லை. மழை காலத்திலும் குளிர் காலத்திலும் அவர்கள் எங்கே சாமான்களை வைப்பார்கள்? எங்கே தலை சாய்த்துக் கொள்வார்கள்? நிவர்த்திக்க வேண்டிய இந்தக் கஷ்டங்களை இயற்கை வைத்தியர் அலட்சியம் செய்ய முடியாது. குற்றம் செய்யும் ஜாதியார் எனப்படுவர். குற்றம் செய்வதைச் சந்தோஷகரமான காரியம் என்று நினைத்துக் குற்றம் செய்வதில்லை. அவர்கள் தொன்று தொட்டு வரும் வழக்கத்திற்கு இரையானவர்கள். ஆகையினால் இப்பொழுது குற்றம் செய்யும் ஜாதியார் என்று நாமம் சூட்டப் பெற்றிருக்கிறார்கள். உருலியிலுள்ள ஜனங்கள் அவர்களை அந்தத் தீய பழக்கத்திலிருந்து மீட்க வேண்டியது கடமையாகும். இயற்கை வைத்தியர் இந்த வேலையையும் அலட்சியம் செய்யக் கூடாது. இத்தகைய பிரச்னைகள் இடைவிடாது எழுந்து கொண்டே இருக்கும். இவ்விதமாக வைத்தியர் செய்ய வேண்டிய வேலை எவ்வளவு விரிவானது என்பதையும் அது எவ்வளவு தூரம் உண்மையான சுயராஜ்யத்துக்காக செய்யப்படுவது என்பதையும் தெரிந்து கொள்ளலாம். உருலியிலுள்ள ஊழியர்களும் ஜனங்களும் இந்த லக்ஷியத்தை அடைவதற்காக உறுதி செய்து கொண்டு உண்மையாக நடந்தால் தான் அந்த வேலை கடவுள் அருளால் வெற்றியடைய முடியும்.

உருலி கஞ்சன் — 3-8-46 — மோ. க. காந்தி.

ஹரிஜன சேவக்கிலிருந்து

## அதிகாரப் பிரிவினை முறை

அவுந்த் சமஸ்தானத்து இளவரசர் அப்பாசாஹிப் பந்து கீழ்வருமாறு எழுதுகிறார்:—

பிரிட்டிஷார் இந்த நாட்டில் தங்கள் ஆதிக்கம் நிலைத்திருப்பதற்கு உதவி செய்யப் போதுமான ஆயுதமாகவே தங்கள் அதிகார வர்க்கத்தினரை அமைத்திருக்கிறார்கள். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்கும் செத்தவர்கள் சமாதானமாய் இருப்பதுபோன்ற சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் இந்த ஆயுதம் போதுமானதுதான்.

ஆனால் நாம் உண்மையான ஜனநாயகமாக வளர வேண்டுமானால் இந்த ஆயுதம் அதற்குத் தடையாக இருக்குமேயன்றி உதவியாக இராது. ஆதலால் இந்தப் பழைய யந்திரத்தை வெளியே எறிந்து விட்டு நமது சொந்த அனுபவத்தைக் கொண்டு ஜனநாயக வாழ்க்கையை அமைக்கும் விஷயத்தில் நமக்கு உதவி செய்யக்கூடிய ஒரு புதிய யந்திரத்தை நாம் சிருஷ்டி செய்து கொள்ள வேண்டும்.

இந்தக் காரியம் சித்தி பெற வேண்டுமானால் நிர்வாக அதிகாரங்களெல்லாம் ஒரே இடத்தில் குவிந்திருப்பதை மாற்றி பிரித்து வைப்பதே முதல் வேலை. மனிதனுக்குக் கௌரவமும் தன்னம்பிக்கையும் தன்னைத் தானே ஆண்டு கொள்வதும் பொறுப்பை நிர்வகிக்கும்பொழுதுதான் உண்டாகும். நம்மைப் பாதுகாப்பதற்கும் நமக்கு நீதி வழங்குவதற்கும் நமக்கு உணவும் உடையும் கொடுப்பதற்கும் ஒரு மத்திய அதிகார ஸ்தாபனத்தை எதிர்பார்த்து நிற்கும் வழக்கத்தை ஒழித்தால்தான் உண்மையான ஜன நாயகம் உண்டாகும். சமூக விஷயத்தில் சன்மார்க்க தத்துவங்களின் அவசியத்தைத் தவறுகள் செய்தும் கஷ்டங்கள் அனுபவித்தும்தான் அறிய முடியும்.

அதிகாரங்களை யெல்லாம் ஒரே ஸ்தாபனத்தினிடம் குவித்து வைப்பது அடிமைத்தனத்திலேயே கொண்டு போய் சேர்க்கும். காங்கிரஸ் மஹா சபை பதவி ஏற்றால் அது ஜனங்களுக்கு நன்மையான விதத்தில் நடந்துகொள்கிறதா இல்லையா என்பதைப் பரிசோதித்து அறிந்துகொள்வதற்கு ஏற்ற உரைகல் யாதெனில் அதிகாரத்தைப் பிரிவினை செய்து, சாதாரண ஜனங்களையும் தங்கள் காரியங்களைத் தாங்களே செய்துகொள்ளும்படி செய்து, அதன் மூலமாக மனிதப் பண்புடையவர்களாகவும் இன்ப வாழ்வு வாழக் கூடியவர்களாகவும் செய்வதேதான்."

அப்பா சாஹிப் அவுந்த் சமஸ்தானத்தின் நிர்வாகத்தில் அதிகமான அனுபவம் பெற்றவர். அந்த அனுபவத்தைக் கொண்டே இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறார்.

புனா, — 30-7-46 — மோ. க. காந்தி

## மதுவைப் பற்றிய பழமொழிகள்

ஜில்கிரைஸ்ட் லாஸன் என்பவர் உலகத்தில் காணப்படும் சிறந்த பழமொழிகளைத் தொகுத்து ஒரு நூல் பிரசுரித்திருக்கிறார். அதிலிருந்து எடுக்கப்பட்டவை கீழ்க்கண்ட பழமொழிகள்:—

1. கடலில் மூழ்கி இறந்தவரைவிடக் கள்ளில் மூழ்கி இறந்தவரே அதிகம்.

(பப்ளியஸ் ஸிரியஸ்)

2. மதுபான நோயைக் குணப்படுத்துவதற்கான சிறந்த மருந்து மதுபானம் செய்யாதபொழுது மது வெறியிலிருப்பவனை நாடுவதேயாகும்.

(சீனப் பழமொழி)

3. மது உள்ளே சென்றுல் அறிவு வெளியே சென்றுவிடும்.

(இத்தாலியப் பழமொழி)

4. ராணுவ தேவதை கொல்லுவதைவிட மது தேவதையே அதிகமாகக் கொல்லுகின்றது.

(ஜெர்மன் பழமொழி)

5. ஜலம் குடிப்பது நோயை உண்டாக்குவதில்லை. கடனும் உண்டாக்குவதில்லை. மனைவியை விதவையாகச் செய்வதுமில்லை.

(ஜான் நீல்)

6. மதுபானமென்னும் முட்டையிலிருந்தே சகல பாபங்களும் பொரிக்கின்றன.

7. மதுவெறி என்பது நாமாகத் தேடிக்கொள்ளும் பைத்தியமேயன்றி வேறன்று.

(ஸெனீக்கா)

8. மது வெறி சிலரை முட்டாள்களாகவும், சிலரை மிருகங்களாகவும், சிலரைப் பிசாசுகளாகவும் ஆக்குகிறது.

9. மதுபானங்கள் டாக்டர்களுக்குப் பால் ஊட்டும் தாதி.

வி. ஜி. டி.

## காங்கிரஸ் மந்திரி சபையும் மூலக் கல்வியும்

காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜீனமாச் செய்த பின் நடந்த கவர்னர் ஆட்சியில் நடத்தப்பட்ட அழிவு வேலையில் தலை சிறந்தது மூலக்கல்வித் திட்டத்தையும் மது விலக்கையும் கிராமக் கைத்தொழில் புனர் நிர்மாணத்திட்டத்தையும் ஒழித்து விட்டது தான். ஆதலால் இப்பொழுது காங்கிரஸ் மந்திரி சபைகள் செய்ய வேண்டிய முதல் வேலை அத்திட்டங்களை மறுபடியும் நடத்தி வைப்பது தான்.

காங்கிரஸ் கல்வி மந்திரிகள் 29 ம்தேதியும் 30 ம் தேதியும் ஸ்ரீபாலாசாஹிப் கெர் தலைமையின் கீழ் மகா நாடு கூடினர்கள். 29 ம் தேதி பிற்பகல் காந்தியடிகள் அந்த மகா நாட்டிற்கு ஒருமணி நேரம் போயிருந்தார்.

சர்க்கார் மூலக்கல்வியை நடத்தாமலிருந்து விட்டாலும் காந்தி யடிகளின் முன் யோஜனையின் காரணமாக தாலிமி சங்கத்தார் அதை நடத்திக்கொண்டே வந்தார்கள். அது ஏழு வருஷங்கள் நடந்து பருவமடைந்திருக்கின்றது. காந்தியடிகள் 1944-ல் விடுதலை பெற்றதும் தாலிமி சங்கத்தாரிடம் மூலக் கல்வியை விரிவுபடுத்த வேண்டியகாலம் வந்துவிட்டதாகக் கூறினர். மூலக்கல்வி ஆரம்பத்துக்கு முன்னும் இறுதிக்குப் பின்னும் கல்வி கொடுக்கவேண்டுமென்றும் மூலக்கல்வியானது வாழ்வுக்கு வேண்டிய கல்வியாக ஆகவேண்டும் என்றும் சொன்னர். எந்த விதத்தில் மூலக் கல்வியை விரிவுபடுத்துவதென்பது பற்றியும் அது விஷயத்தில் மந்திரிகளுடைய கடமை யாது என்பது பற்றியும் அந்த மகாநாட்டில் விளக்கிச் சொன்னர். டாக்டர் ஜாக்கீர் உஸேன், மெல்ல முடியாத அளவு வாயில் போட்டுக்கொள்ள ஆத்திரப்படக் கூடாதென்று சொன்னர்.

### நான் மந்திரியானல்

காந்தியடிகள் கூறியதாவது:

"என்ன செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரிகிறது. ஆனல் எப்படிச் செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. உங்களுடைய கஷ்டங்களை அறிவேன். பழைய ரீதியிலிருந்து திடீரென்று புது ரீதிக்கு மாறுவது எளிதான காரியமன்று. நான் மந்திரியாயிருந்தால் இனி மூலக் கல்விதான் கொடுக்கப்பட வேண்டுமென்று உத்திரவிடுவேன். அநேக மாகாணங்களில் முதியோர் கல்வித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையும் மூலக் கைத்தொழில் மூலமாகவே நடத்தவேண்டும். இந்த விஷயத்திற்கு நூல் நூற்பதும் அது சம்பந்தமான முறைகளும் முதல்தரமான மூலக்கைத் தொழில்களாகும். ஆனல் தகுதியுடையதே தங்கும் என்று நம்புவதால் இதைப் பற்றி நான் வற்புறுத்தவில்லை. சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ஆசிரியர்களும் சர்க்காருடைய புதுக் கல்விக் கொள்கையின் நன்மையைப்பற்றி பிரசாரம் செய்ய வேண்டும். அவர்களுக்கு அதில் நம்பிக்கையில்லையானலும், அதை நடத்தி வைக்கப் பிரியமில்லையானலும் அவர்கள் ராஜீநாமா செய்துவிட வேண்டும். ஆனல் மந்திரிகள் முனைந்து நிற்பார்களானல் அம்மாதிரி நிலைமை உண்டாக மாட்டாது. உத்திரவு இடுவதினல் மட்டுமே காரியம் சித்தியாகிவிட மாட்டாது.

### சர்வ கலாசாலைச் சீர்திருத்தம்

முதியோர் கல்வியைப் பற்றிச் சொன்னதெல்லாம் சர்வகலாசாலைக் கல்விக்கும் பொருந்தும். அதுவும் இந்திய வாழ்க்கைக்கு ஒத்ததாக அமையவேண்டும். அதனல் சர்வ கலாசாலைக் கல்வியானது மூலக் கல்வியின் தொடர்ச்சியாகவே இருக்கவேண்டும். இது தான் முக்கியமான விஷயம்.

இந்தமாதிரி உங்களுக்கும் தோன்றுவிட்டால் என்னுடைய ஆலோசனையைக் கேட்பதில் உங்களுக்கு எவ்விதப் பிரயோசனமும் இல்லை. சர்வகலாசாலைக் கல்வி சுதந்திரத்துக்கு தகுதியாக்காமல் அடிமைத் தனத்திற்கே தகுதியாக்குகிறது என்று நான் எண்ணுவது போலவே நீங்களும் எண்ணினல் என்னைப் போலவே நீங்களும் தேசத்தின் தேவைக்கு ஒத்த புதுமுறையில் அதை அடியோடு மாற்றியமைக்க ஆத்திரப் படுவீர்கள். இன்று சர்வகலாசாலையில் தேறும் மாணவர்கள் சர்க்கார் வேலைக்காக அலைகிறுர்கள். அது கிடையாவிட்டால் குழப்பங்கள் உண்டுபண்ண முற்படுகிறுர்கள். பிறரைச் சார்ந்து நிற்கவும் பிறரிடம் இரக்கவும் அவர்கள் வெட்கப்படுவதில்லை. அவர்களுடைய துக்ககரமான நிலைமை அது. சர்வகலாசாலையின் நோக்கமெல்லாம் தேசத்தின் சுதந்தரத்துக்காகச் சேவை செய்யவும், உயிர் துறக்கவும் கூடிய உண்மையான பொதுஜன ஊழியர்களை உண்டாக்குவது ஒன்றுதான். ஆதலால் தாலிமி சங்கத்திலுள்ள ஆசிரியர்களை உபயோகித்து சர்வகலாசாலைக் கல்வியை மூலக் கல்வியோடு இணைக்கவேண்டியது அவசியமாகும்.

மந்திரிகள் ஜனங்களுடைய பிரதிநிதிகள். அதனல் பொதுஜன ஆதரவு இல்லாவிட்டால் மந்திரிகள் தங்களுடைய உத்திரவுகளைக் கொண்டே மூலக்கல்வியாகிய சிறு செடியைப் பெரிய மரமாக வளர்த்துவிடுவது முடியாது.பொதுஜன ஆதரவு இல்லாவிட்டால் மந்திரிகள் உடனே ராஜீனமா செய்ய வேண்டியதுதான். அராஜகம் ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சவேண்டியதில்லை. கடமையைச் செய்யவேண்டும்."

காந்தியடிகள் கேள்வி கேட்க விரும்புகிறவர்கள் கேட்கலாம் என்று சொன்னர்.

கேள்வி:—தானே காப்பாற்றிக் கொள்ளும் அஸ்திவாரமில்லாமல் மூலக் கல்வியை நடத்திவைக்க முடியுமா?

பதில்:—நீங்கள் நடத்திப் பார்க்கலாம். அப்படியானல் மூலக்கல்வியை மறந்துவிடவேண்டியதுதான். மூலக்கல்விக்குத் தன்னைத்தானே காப்பாற்றும் அம்சம் அத்தியாவசியமில்லை.ஆனல் அதுதான் அதற்குத் தக்க உரைகல். ஆரம்பத்தில் தனக்கு வேண்டிய பொருளை உற்பத்தி செய்யாவிட்டாலும் பிறகு உற்

பத்தி செய்யவே செய்யும். அந்தவிதமாக இல்லாவிட்டால் மூலக்கல்வியானது மனிதனை வாழ்வுக்குத் தக்கதாக ஆக்காது. ஆதலால் தன்னைத்தானே காப்பாற்றும் அம்சம் இல்லாத மூலக்கல்வி உயிரில்லாத வெறும் உடலே யாகும்.

கேள்வி :—முஸ்லிம்கள் கைராட்டினத்தை எதிர்க்கிறார்கள். அத்துடன் சில பிரதேசங்களில் பருத்தி விளையவில்லை. அத்தகைய இடங்களில் மூலக்கல்விக்கு வேறு தொழில் ஏதேனும் ஏற்படுத்திக்கொள்ளலாமா ?

பதில் :—மூலக் கல்விக்கு அவசியமான கைத்தொழில் எல்லோரும் கையாளக் கூடியதாக இருக்கவேண்டும். இங்கிலாந்து தேசத்தில் பருத்தி விளையவில்லை. அப்படி இருந்தும் துணி உற்பத்தியாக்கவில்லையா ? அப்படி இருக்கப் பருத்தி விளையாத ஜில்லாவுக்குப் பருத்தி அனுப்பி நூற்கச் செய்வது முடியாத காரியமா? பண்டைக் காலத்தில் இந்தியாவில் பருத்தி விளையாத இடமே கிடையாது. இன்றுகூட பருத்தி மரம் எங்கும் உண்டாய்க்கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் முதலாளிகள்தான் தங்கள் நலன்களுக்காகச் சிலவிடங்களிலேயே பருத்தி விளைவிக்கும்படி செய்துவிட்டார்கள்.

அத்துடன் தன்னுடைய முயற்சியினாலேயே தனக்கு வேண்டிய உடையை உற்பத்திசெய்துகொள்வதற்குரிய திறமையை யுண்டாக்குவதும் ஒரு கல்வியாகும். நூற்பது சம்பந்தமாகச் சரியாகத் தெரிந்து கொள்வது மற்றக் கைத்தொழில்களைவிட அதிகமான கல்வியை அளிக்கும். முஸ்லிம்களுடைய தவறான எண்ணத்தை இன்று மாற்ற முடியாமலிருக்கலாம். ஆனால் நாம் உறுதியாக நம்பி வெற்றியை நிரூபித்துக் காட்டினால் முஸல்மான்களும் கைராட்டினத்தை ஏற்றுக்கொள்வார்கள். முஸ்லிம் லீகோ மற்ற இதர முஸ்லிம் ஸ்தாபனமோ செய்யாத அளவு கைராட்டினமானது ஏழை முஸ்லிம்களுக்கு நன்மை செய்திருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டிருப்பதாகத் தெரியவில்லை பண்டைக்காலத்திலும் முஸ்லிம்கள்தான் டக்கா மஸ்லின் நெய்தவர்கள். இப்பொழுதும் வங்காளத்தில் உள்ள நெசவாளர்களில் பெரும்பாலோர் முஸ்லிம்களே ஆவார்கள். இதே மாதிரிதான் மஹா ராஷ்டிரமும். ஆனால் நாம் நம்முடைய கடமையை நிறைவேற்றினால் உண்மை நிலைத்து நிற்கும் என்பதில் சந்தேகமில்லை.

கேள்வி :—மூலக்கல்விக்கு வேண்டிய திறமையான ஆசிரியர்களை உற்பத்தி செய்வதற்குக் காலமாகுமே. அதுவரைப் பள்ளிக்கூடங்களில் கல்வியை அபிவிருத்தி செய்ய என்ன செய்யவேண்டும் என்று ஸ்ரீமான் அவினாசிலிங்கம் ஆங்கிலத்தில் காந்திஜீயைக் கேட்டார். அதைக் கேட்டதும் காந்தி யடிகள் "உங்களுக்கு ஹிந்துஸ்தானியில் பேசத் தெரியாவிட்டால் நீங்கள் பக்கத்திலுள்ளவர் காதில் சொல்லலாம். அதை அவர் எனக்கு ஹிந்துஸ்தானியில் சொல்லுவார்" என்று கேலியாக யோசனை சொன்னார். எல்லோரும் சிரித்தார்கள்.

இப்பொழுதுள்ள கல்விமுறை இந்தியாவுக்குச் சுதந்திரத்தைத் தராது, அடிமைத்தனத்தைத்தான் அதிகப்படுத்தும் என்பதை நீங்கள் உணர்ந்து கொண்டால் வேறுவிதமான கல்விமுறையை ஏற்படுத்த முடிந்தாலும் முடியாவிட்டாலும் இப்பொழுதுள்ள முறையை ஆதரிக்கவே மாட்டீர்கள். மூலக் கல்வித் தத்துவங்களை எவ்வளவுதூரம் அனுஷ்டிக்க முடியுமோ அவ்வளவு தூரம் அனுஷ்டிப்பதோடு திருப்தி யடைய வேண்டியதுதான். அந்த முறையை மந்திரிகள் ஏற்படுத்துவது ஜனங்களுக்குப் பிடிக்காவிட்டால் மந்திரிகள் ராஜீனமா செய்வது தான் நல்லது. ஜனங்கள் விஷத்தை விரும்புகிறார்கள், உயிர்தரும் உணவை விரும்பவில்லை என்பதற்காக மந்திரிகள் விஷத்தைப் பறிமாறிக் கொண்டிருக்க முடியாது.

கேள்வி :—மூலக் கல்விக்கு ஊழியர்கள்தான் தேவை பணம் தேவை இல்லை என்று சொல்லுகிறீர்கள். ஊழியர்களைப் பயிற்சி செய்வதற்குப் பணம் வேண்டுமல்லவா ? என்ன செய்வது ?

பதில் :—இதற்கு வழி உங்களிடமே இருக்கிறது. நீங்களே ஆரம்பிக்க வேண்டும். நீங்கள் உட்கார்ந்து கொண்டு பிறரை உழைக்கச் சொன்னால் ஒன்றும் நடைபெறாது. என்னுடைய வழி அதுவன்று. சிறு வயதிலிருந்தே எதையும் நானே செய்வேன். இங்கிலீஷ்காரர்களைப் பாருங்கள். இங்கே ஒரு சிலரே வந்தார்கள். இப்பொழுது பெரிய ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்திவிட்டார்கள். அதன் காரணமாக நாம் தாய்மொழி வேண்டாம் இங்கிலீஷே வேண்டுமென்று அதைக் கட்டி அணைத்துக் கொள்ளும் நிலைமைக்கு வந்து விட்டோம். இதிலிருந்து மனமுண்டானால் வழியுண்டு என்பதை அறிந்து கொள்ளலாமல்லவா ?

ஆங்கில மொழி

கேள்வி :—இந்தத் திட்டத்தில் ஆங்கில பாஷைக்கு என்ன ஸ்தானம் ? அதைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமா ? இஷ்ட பாடமாக்க வேண்டுமா ?

பதில் :—என்ன குறையிருந்தாலும் குழந்தை பாலுக்காகத் தாயாருடைய ஸ்தனத்தையே நம்பி நிற்பது எவ்வளவு அவசியமோ அது போலவே நாமும் நமது தாய்மொழியை விடாது பிடித்துக் கொள்ள வேண்டும். தாயாருடைய ஸ்தனம்தான் உயிர்தரும் பால் தர முடியும். ஆங்கில மொழி இருக்க வேண்டிய ஸ்தானத்திலிருந்தால் நான் அதை நேசிப்பேன், தனக்கு உரியதல்லாத ஸ்தானத்தை அபகரித்துக் கொள்ளுமானால் அதை முழுமூச்சாக எதிர்ப்பேன். ஆங்கில மொழி இன்று உலக மொழி என்பதில் சந்தேகமில்லை. அதனால் அதற்கு இரண்டாவது ஸ்தானம் கொடுத்து இஷ்ட பாடமாகச் செய்வேன். அப்படிச் செய்வதும் சர்வகலாசாலைப் படிப்புத் திட்டத்தில் தான். அதற்குக் குறைந்த பாடத் திட்டத்தில் அன்று. ஆங்கிலக் கல்வி வேண்டியது குறிப்பிட்ட ஒரு சிலருக்குத்தான். கோடிக் கணக்கான மக்களுக் கன்று. இன்று நம்மால் ஆரம்பக் கல்வியைக் கூட இலவசமாகவும் கட்டாயமாகவும் கொடுக்க முடியாமல் இருக்கிறதே, அப்படி இருக்க எல்லோருக்கும் இங்கிலீஷ் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்வது எப்படி ? ரஷ்யாவைப் பாருங்கள். இங்கிலிஷ் இல்லாமலே அது விஞ்ஞான முன்னேற்றம் அடைந்து விடவில்லையா ? இங்கிலீஷ் இல்லாமல் முடியாது என்ற எண்ணத்துக்குக் காரணம் நமது அடிமை மனப்பான்மைதான். அந்தத் தோல்வி மனப்பான்மையை நான் ஒருநாளும் ஒப்புக்கொள்ள மாட்டேன்.

இறுதியில் கல்வி மந்திரிகள் மகாநாடு கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது :—

"ஜுலை 30, 31-ம் தேதிகளில் பூனாவில் கூடிய கல்வி மந்திரிகள் ஊழியர்கள் மகாநாடு முக்கியமான கல்விப் பிரச்னைகளை ஆராய்ந்து சிலத் தீர்மானங்களை நிறைவேற்றியது. இறுதித் தீர்மானம் வருமாறு:

குழந்தைகளுடைய தேக க்ஷேமமானது தேசியக் கல்வியில் இணை பிரியாத ஒரு அம்சமாகும் என்றும் அதனால் போதுமான ஆகாரம் உண்பது, வியாதி வாராமல் தடுப்பது, வியாதிவந்தால் குணப்படுத்துவது, ஆரோக்கிய வழக்கங்களை ஏற்படுத்துவது உட்பட சகல தேக க்ஷேம விஷயங்கள் எல்லாவற்றையும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலும், நடுத்தரப் பள்ளிக்கூடங்களிலும் ஏற்படுத்துவதற்கு அவசியமான காரியங்களைச் செய்ய வேண்டும் என்று இந்த மகாநாடு அபிப்பிராயப்படுகிறது."

இத்தீர்மானங்களைக் கொண்டுவந்த திருமதி ஆஷா தேவி பொதுஜன ஆதரவு இல்லாவிட்டால் மந்திரிகளால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்கிறார். அதனால் ஆசிரியர்கள், வைத்தியர்கள், சமூக ஊழியர்கள் போன்ற நிபுணர்களை அழைத்து, ஒரு சிறு மகாநாடு கூட்ட வேண்டுமென்று யோசனை கூறுகிறார்.

பூனா, —3-8-46.— பியாரேலால்

அச்சடித்தவர்: பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி.டி., சென்னை.
பிரசுரித்தவர்: சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை 17.